**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.66/2020** **நாள். 13.10.2025**

2025–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 குழந்தைவேல் த/பெ. பழனியப்பன்**

**குறுக்கு விசாரணை**

1) நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு விவசாயம்தான் தொழில் ஆகும். வேறு தொழில் இல்லை. எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி நிலத்தில் இருந்து வருடத்திற்கு ரூபாய் 4 அல்லது 5 லட்சம் வருமானம் வரும். எனக்கு விவசாயத்தின் மூலம் வருமானம் வரும் என்பதற்காக ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. விவசாயத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்துதான் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். பிரதிவாதிக்கு 23.06.2018 தேதியில் நான் கடன் கொடுத்தேன். பிரதிவாதி எனக்கு பங்காளி உறவு முறை ஆகும். நான் கடன் கொடுப்பதற்கு ஒரு 10 நாட்களுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். என்னிடம் கடன் கேட்டபோது, பிரதிவாதியும் அவரின் தகப்பனாரும் வந்து கேட்டார்கள். நான் பிரதிவாதிக்கு 23.06.2018 அன்று கடன் கொடுப்பதாக சொன்னேன்.

2) பிரதிவாதிக்கு 23.06.2018 அன்று 9 மணிக்கு கடன் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும்போது சதாசிவம், செந்தில், பிரதிவாதியும் இருந்தார்கள். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கினார். பாண்டில் பிரதிவாதியின் பெயர் மட்டும் உள்ளது, அவரின் தகப்பனார் பெயர் இல்லை. சதாசிவம், செந்தில் ஆகியோரை நான் அழைக்கவில்லை, பிரதிவாதிதான் அழைத்து வந்தார். நான் பிரதிவாதிக்கு 2,50,000/– கடன் கொடுத்தேன். 2,50,000/– லட்சம் ரூபாயை, 500/– ரூபாய் தாள்களாக 5 கட்டுகள் கொடுத்தேன். பாண்டு எந்த கலர் மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் புளூ கலரில் எழுதப்பட்டுள்ளது.

பாண்டில் ஆங்கிலத்தேதி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது, தமிழ் தேதி குறிப்பிடவில்லை.

3) பாண்டு ஒரே பேனாவினால்தான் எழுதப்பட்டது. பிரதிவாதி பாண்டில் இரண்டு கையெழுத்து போட்டார். பிரவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் அவர் தாக்கல் செய்த எதிருரையை எனக்கு கொடுக்கவில்லை, அதனால் அதைப்பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. எதிருரை விவரங்களை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. கபிலர்மலையில் உள்ள உழவன் விவசாய சங்கத்தில் நான் உறுப்பினர் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் 400 உறுப்பிரனர்கள் உள்ளார்கள். 400 உறுப்பினர்களுக்கு தெரிந்த நபர்கள் வந்து கடன் கேட்டால் சிபாரிசின் பேரில் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனாருக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் ஆரம்பத்தில் இருந்து மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று வருவார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 6 ஏக்கர் நிலம் உள்ளது. அது தண்ணீர் பாய்ச்சுல் உள்ள விவசாய நிலம் என்றால் சரிதான்.

4) கபிலர்மலை உழவன் விவசாய சங்கத்தில் நான் ஒரு பங்குதாரராக இருப்பதால், என்னுடைய சிபாரிசின் பேரில் பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் அங்கு ரூபாய் 30 ஆயிரம் கடன் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. கபிலர்மலை உழவன் விவசாய சங்கத்தில் குணா மற்றும செந்தில் ஆகியோர்கள் வேலை செய்கிறார்கள். மேற்படி சங்கத்தில் மூர்த்தி என்பவர் வேலை செய்கிறாரா என்றால் இல்லை. மேற்படி விவசாய சங்கத்தில் எனது சிபாரிசின் அடிப்படையில் ரூபாய் 30 ஆயிரம் பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் கடன் வாங்கினார்கள் என்றாலும், அதற்காக அவர்களிடம் பூர்த்தி செய்யப்படாத புரோ நோட்டுக்களில் கையெழுத்து மற்றும் கைரேகை பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி கபிலர்மலை உழவன் விவசாய சங்கத்தில் பிரதிவாதியும், அவரின்

தகப்பனாரும் பெற்ற கடனுக்காக வட்டியை செலுத்தி வந்தார் என்றால் அவர்கடன் வாங்கவில்லை.

5) கொரோனா சமயத்தில், பிரதிவாதியால் வட்டி கட்ட முடியாததால், அவர்கள் கொரோனா காலத்திற்கு பின்னிட்டு பிரதிவாதி மொத்தமாக வட்டி மற்றும் அசலை செலுத்த வந்தபோது, நான் அதை மறுத்து மேற்படி சங்கத்தில் பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் கொடுத்திருந்த வெற்று புரோ நோட்டுக்களை நான் எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. சின்னாப்பாளையத்தில் உள்ள கந்தசாமி என்பவரை எனக்கு தெரியாது. கந்தசாமி மூலம் பிரதிவாதியும், பிரதிவாதியின் தகப்பனாரும் என்னிடம் பைசல் பேசினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பைசல் பேசியபோது, நான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பிவிட்டேன் என்றும், அதனால் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்ளுங்கள் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல.

6) பிரதிவாதிக்கும், அவரின் தகப்பனாருக்கும் 6 ஏக்கர் நிலம் உள்ள நிலையில், அவர்கள் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வேண்டிய நபர்களை நான் சாட்சிகளாக வைத்து, தாவா புரோ நோட்டை போர்ஜரியாக தயார் செய்து, அதன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் விவரங்களை தெரிந்துகொண்டு, வழக்கிற்காக எதிருரை விவரங்கள் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும்தேதியில், பிரதிவாதி தாவா புரோ நோட்டின் பேரில் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.10.13 18:42:14 +0530

Sub Judge,
Paramathy

<u>(சார்பு நீதிமன்றம்), பரமத்தி</u>

**ஓ.எஸ்.எண்.66/2020** **நாள். 13.10.2025**

2025–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ம் நாள் வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**<u>வா.சா.2 செந்தில் த/பெ. ராதாகிருஷ்ணன்</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நானும் வாதியும் நண்பர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி, எனக்கு 10 வருடங்களாக பழக்கம் ஆவார். நானும், பிரதிவாதியும் வெவ்வோறு ஊரைச் சேர்ந்தர்வர்கள். எனது ஊருக்கும், பிரதிவாதியின் ஊருக்கும் சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். எனக்கும், பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை. நானும், பிரதிவாதியும் பள்ளி நண்பர்கள் இல்லை. பாண்டில் கையெழுத்து போடுவதற்கு என்னை பிரதிவாதிதான் அழைத்தார். பாண்டை எழுதுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என்னை அழைத்தார். பாண்டு 23.06.2018 தேதியில் எழுதப்பட்டது. பாண்டு எழுதும்போது, நானும், வாதி, பிரதிவாதி, பாண்டை எழுதிய சதாசிவம் ஆகியோர்கள் இருந்தோம்.

2) பாண்டு என்ன கலரில் எழுதப்பட்டது என்றால் புளூ கலரில் எழுதப்பட்டது. நான் சாட்சி கையெழுத்தையும் புளூ கலரில் செய்தேன். பாண்டை எழுதிய அதே பேனாவில்தான் நான் கையெழுத்து போட்டேன். நான் 9 மணிக்கு வாதியின் வீட்டிற்கு சென்றேன். 9.45 மணிக்குள் பாண்டு எழுதி, பணம் கொடுக்கப்பட்டது. பிரதிவாதிக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. நான் சொல்லும்தேதியில் பிரதிவாதி பாண்டில் கையெழுத்தும், கைரேகையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் பிரதிவாதி எந்த

தொகையும் வாதியிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும், யாதொரு பழக்கமும் இல்லை என்றாலும், வாதியும் நானும், நண்பர்கள் என்ற முறையில் தாவா பாண்டை போர்ஜரியாக தயார் செய்து, இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

Sub Judge,
Paramathy

**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.66/2020** **நாள். 13.10.2025**

2025–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ம் நாள் வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.3 சதாசிவம் த/பெ. பழனியப்பன்**

**குறுக்கு விசாரணை**

1) வாதி, பிரதிவாதி, பிரதிவாதியின் தந்தை மற்றும் நானும் ஆகியோர்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதியின் மருமகளுக்கு நான் மாமா உறவுமுறை என்றால் சரிதான். கபிலர்மலை உழவன் விவசாய சங்கத்தில் நான் வாதியின் சிபாரிசின் பேரில் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. கபிலர்மலை உழவன் விவசாய சங்கம் உள்ளது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் ஊருக்கும், எனது ஊருக்கும் இடையே சுமார் 24 கி.மீ தூரம் இருக்கும். பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் தந்தைக்கும், எனக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. பிரதிவாதியும், அவரின் தகப்பனார், நான் விசியேசத்திற்கு வாதியின் வீட்டிற்கும் வரும்போது பழக்கம் என்றால் சரிதான்.

2) பிரதிவாதியும், அவரின் தந்தையும் எனக்கு 15 வருடங்களாக பழக்கம். பிரதிவாதிக்கும், அவரின் தகப்பனாருக்கும் சொந்தமாக நிலங்கள் உள்ளது. அந்த நிலங்கள் தண்ணீர் பாசன வசதி உள்ள நிலம் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா பாண்டு எப்போது எழுதப்பட்டது என்றால் 23.06.2018 அன்று எழுதப்பட்டது. பாண்டை எழுதுவதற்கு என்னை பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் என்னை அழைத்து வந்தார்கள். பாண்டு எழுதுவதற்கு 3 நாட்களுக்கு முன்பு என்னை அழைத்தார்கள். பாண்டு என்ன கலர் மைபேனாவில் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3) நான் வாதி தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகளிலும் தாக்கல் செய்துள்ள பாண்டுகளை நான் எழுதியது சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

பாண்டு எழுதப்பட்ட பேனாவிலேயே சாட்சிகள் கையெழுத்து போட்டார்களா அல்லது வேறு பேனாவில் கையெழுத்து போட்டார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னை பாண்டு எழுதுவதற்காக நான் பள்ளிகூடம் அருகில் நின்றுகொண்டு இருந்தபோது, பிரதிவாதியும், அவரின் தந்தையும் என்னை அழைத்து சென்றார்கள். நான் வாதியின் வீட்டிற்கு 9 மணிக்கு சென்றேன். பணம் சுமார் 9ல் இருந்து 10.15 மணிக்குள் கொடுக்கப்பட்டது. பணம் கொடுக்கும் நிகழ்வு மற்றும் பாண்டு எழுதும் நிகழ்வு 9 மணி முதல் 10.15 மணிக்குள் முடிந்துவிட்டது.

4) பிரதிவாதியின் தகப்பனாருக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல், மருத்துவமனைக்கு சென்று வந்து கொண்டு இருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பணம் ரூபாய் 2,50,000/- கொடுக்கப்பட்டது. ரூபாய் 2,50,000/-, ரூபாய் 500 தாள்களாக கொடுக்கப்பட்டது. வாதியிடம், பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் வாதியின் நெருங்கிய உறவினர் என்பதால், வாதி தாவா பாண்டை என் மூலமாக போர்ஜரியாக தயார் செய்து, அதன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இரண்டு வழக்குளிலும் வாதியிடம்,, பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் என் முன்னிலையில் யாதொரொரு கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல.

5) என் முன்னிலையில், பிரதிவாதியும், அவரின் தகப்பனாரும் நான் சொல்லியுள்ள தேதியில் பாண்டில் கையெழுத்தும், கைரேகையும் போடவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

Sub Judge,
Paramathy